**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– 2016–2017 ஆம் நிதியாண்டில் கை, கால் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குறைவுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு மாத கால பல்லூடகப் பயிற்சி மற்றும் இலக்கப் புகைப்பட பயிற்சியை தேசிய திரைப்படக் கழகம் மூலம் வழங்குதல்– அனுமதி மற்றும் ரூ.21,75,000/– நிதி ஒப்பளிப்பு – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.18

நாள்: 16–02–2017
துன்முகி, மாசி 4,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. அரசாணை(1D) எண்.06, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை நாள் 25–01–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2654/ மா.தி.ந.3–1/ 2016, நாள் 11.07.2016 மற்றும் 16.09.2016.

-------

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2015–16 ஆம் நிதியாண்டில் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம், சென்னை மண்டல அலுவலகம் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் ஒரு மாத கால பல்லூடகப் பயிற்சிக்கு, ரூ:9,25,000/–மும், இலக்கப் புகைப்பட பயிற்சிக்கு ரூ.11,75,000/–மும் செலவினம் மேற்கொள்ள, ரூ.21,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில், தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு நல்ல வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில் பின்வருமாறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

i. FCV- டிஜிட்டல் நான் லீனியர் எடிட்டிங்–DNLE
ii. AVID- டிஜிட்டல் நான் லீனியர் எடிட்டிங்–DNLE
iii. பல்லூடகப் பயிற்சி –Multimedia Training
iv. இலக்க புகைப்பட பயிற்சி– Digital Still Photography
v. ஆடியோ இன்ஜினியரிங்
vi. அனிமேஷன்

எனவே, மேற்படி பயிற்சிகள் 2016–2017 ஆம் நிதியாண்டில் 250 மாற்றுத் திறனாளிகளுக்கு தேசிய திரைப்பட வளர்ச்சி நிறுவனம் , சென்னை மூலம் நடத்திட அனுமதி வேண்டியும் பின்வருமாறு விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ.எண். | பயிற்சி வகை | மொத்த பயனாளிகள் | நபர் ஒருவருக்கு செலவினம் | | | மொ... தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | பயிற்சி கட்டணம் | பயிற்சி உதவித் தொகை | விடுதி வசதி | |
| 1. | FCV-டிஜிட்டல் நான் லைனர் எடிட்டிங்–DNLE, | 50 | ரூ.8,000/– | ரூ.1,000/– | ரூ.4,500/– | ரூ.6,75,000/– |
| 2. | AVID-டிஜிட்டல் நான் லைனர் எடிட்டிங்–DNLE | 50 | ரூ.8,000/– | ரூ.1,000/– | ரூ.4,500/– | ரூ.6,75,000/– |
| 3. | பல்லூடக பயிற்சி (Multimedia Training ) | 50 | ரூ.6,000/– | ரூ.1,000/– | ரூ.4,500/– | ரூ.5,75,000/– |
| 4. | இலக்க புகைப்பட பயிற்சி (Digital Still Photography) | 50 | ரூ.8,500/– | ரூ.1,000/– | ரூ.4,500/– | ரூ.,7,00,000/– |
| 5. | ஆடியோ இன்ஜினியரிங் | 25 | ரூ.13,500/– | ரூ.1,000/– | ரூ.4,500/– | ரூ.4,75,000/– |
| 6. | அனிமேஷன் | 25 | ரூ.20,000/– | ரூ.1,000/– | ரூ.4,500/– | ரூ.6,37,500/– |
| மொத்தம் | | 250 | | | | ரூ.37,37,500/– |

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம், சென்னை மண்டல அலுவலகம் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் ஒரு மாத கால பயிற்சிக்கு ரூ.21,75,000/– (ரூபாய் இருபத்தோரு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) கீழ் கண்டுள்ளவாறு செலவினம் மேற்கொள்ள, நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது. மேலும், ஒதுக்கீடு செய்யப்படும் தொகையில் விடுதி வசதி தேவைப்படாத மாணவர்கள் இருந்தால், அந்த தொகை அரசு கணக்கில் திரும்ப செலுத்துமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

| வ.எண். | பயிற்சி வகை | மொத்த பயனாளிகள் | நபர் ஒருவருக்கு செலவினம் | | | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | பயிற்சி கட்டணம் | பயிற்சி உதவித் தொகை | விடுதி வசதி | |
| 1. | FCV-டிஜிட்டல் நான் லைனர் எடிட்டிங்–DNLE, | 50 | ரூ.8,000/– | ரூ.1,000/– | ரூ.2,250/– | ரூ.5,62,500/– |
| 2. | AVID-டிஜிட்டல் நான் லைனர் எடிட்டிங்–DNLE | 50 | ரூ.8,000/– | ரூ.1,000/– | ரூ.2,250/– | ரூ.5,62,500/– |
| 3. | பல்லூடக பயிற்சி (Multimedia Training ) | 50 | ரூ.6,000/– | ரூ.1,000/– | ரூ.2,2,50/– | ரூ.4,62,500/– |
| 4. | இலக்க புகைப்பட பயிற்சி (Digital Still Photography) | 50 | ரூ.8,500/– | ரூ.1,000/– | ரூ.2,250/– | ரூ.,5,87,500/– |
| | மொத்தம் | 200 | | | | ரூ.21,75,000/– |

மேலும், புதிய பயிற்சிகளை உடனடியாக சேர்த்திடாமல் அப்பிரிவில் உள்ள வேலைவாய்ப்பினை அறிந்திட ஏதுவாக அவற்றை படிப்படியாக சேர்த்திடுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்:-

2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02– சமூக நலன்– 101– மாற்றுத் திறனாளிகள் நலன்–I. திட்டத்தில் சேராதது–CO- மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் –72 பயிற்சி. (த.தொ.கு 2235–02–101–CO–7206)

5. தேவையான நிதி ஒதுக்கம் திருத்திய மதிப்பீடு 2016–17ல் சேர்க்கப்பட்டுள்ளது.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.6550/நிதி(சந)/2017, நாள் 11.02.2017–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

<u>நகல்:–</u>
நிதி (சந)துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர்,சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

16/2/17
பிரிவு அலுவலர்.
16/2/17